www.Padasalai.Net www.TrbTnpsc.com

தேர்வு எண் | | | | | | |

வகுப்பு : 6

# இரண்டாம் பருவம் - தொகுத்தறி மதிப்பீடு (SA)- 2023 - 24

## தமிழ்

நேரம் : 2.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 60

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14X1=14

1. நாம் -------- சொல்படி நடக்க வேண்டும்.
அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

2. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடுமேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் --------
அ) ஆடு மேய்க்க ஆள் இல்லை ஆ) ஊரில் பள்ளிக் கூடம் இல்லை
இ) வழி தெரியவில்லை ஈ) பேருந்து வசதியில்லை

3. தவறான சொல்லை எழுதுக.
அ) கண்டான் ஆ) வென்றான் இ) நண்டு ஈ) வண்டு

4. மாணவர்கள் நூல்களை -------- கற்க வேண்டும்.
அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

5. நிலையான செல்வம் ----------
அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்

6. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
அ) நா + னிலம் ஆ) நான்கு + நிலம் இ) நா + நிலம் ஈ) நான் + நிலம்

7. விழாக்காலங்களின் வீட்டின் வாயிலில் மாவிலையால் --------- கட்டுவர்.
அ) செடி ஆ) கொடி இ) தோரணம் ஈ) அலங்கார வளைவு

8. ஆராயும் அறிவு உடையவர்கள் -------- சொற்களைப் பேசமாட்டார்கள்.
அ) உயர்வான ஆ) விலையற்ற இ) பயன்தராத ஈ) பயன்உடைய

9. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ----------
அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

10. பொங்கல் + அன்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -------
அ) பொங்கலன்று ஆ) பொங்கல்அன்று இ) பொங்கலென்று ஈ) பொங்கஅன்று

11. காமராசர் பிறந்தநாளான ஜூலை பதினைந்தாம் நாள் --------- எனக் கொண்டாடப்படுகிறது.
அ) குழந்தைகள் நாள் ஆ) மாணவர்நாள் இ) ஆசிரியர் நாள் ஈ) கல்வி வளர்ச்சி நாள்

12. சிரம் என்பது --------
அ) தலை ஆ) தழை இ) தளை ஈ) கை

13. சரியான சுட்டுச் சொல்லைத் தேர்க.
என் வீடு -------- உள்ளது.
அ) அவை ஆ) அது இ) அங்கே ஈ) எவை

14. மயங்கொலிப் பிழையற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
என் வீட்டுத் தோட்டத்தில் மலர்கள் ------- வீசின.
அ) மனம் ஆ) மணம் இ) மநம் ஈ) மறம்

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5x2=10

15. எதை நம்பி வாழக்கூடாது?

16. காமராசர் முதல்வராகப் பொறுப்பேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

17. நமது வீட்டிற்கு வந்தவரை உபசரிக்கும் முறையாக நாட்டுப்புறப் பாடல் கூறுவது யாது?
18. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
19. இன எழுத்துகள் என்றால் என்ன?
20. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?
21. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?
22. சிறு வணிகப் பொருட்கள் யாவை?

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4x3=12

23. நீங்கள் படித்து என்னவாக விரும்புகிறீர்கள் ஏன்?
24. காமராசரின் கல்விப்பணிகள் குறித்து எழுதுக.
25. கீழ்க்காணும் திருக்குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
 உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
 கள்ளத்தால் கள்வேம் எனல்
26. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
27. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?
28. அந்த, இந்த என்னும் சுட்டுச்சொற்களை அமைத்து மூன்று தொடர்கள் எழுதுக.

**IV. அடிபிறழாமல் எழுதுக.** 3+2=5

29. 'மன்னனும் மாசறக்' – எனத் தொடங்கும் மூதுரைப் பாடல்.
30. 'வெள்ளத்து' – எனத் தொடங்கும் திருக்குறள்.

**V. விடையளிக்கவும்:** 2x4=8

31. அ) நீங்கள் முதலமைச்சரானால் கல்வி முன்னேற்றத்திற்காக என்னென்ன திட்டங்கள் வகுப்பீர்கள்?

(அல்லது)

ஆ) உங்கள் நண்பரிடம் உங்களுக்குப் பிடித்த பண்புகளைப் பட்டியலிடுக.

32. அ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

**VI. ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.** 1x6=6

33. பிறந்த நாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

பொங்கல் திருநாள் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x1=5

34. கலைச்சொல் எழுதுக.
 Welcome
35. விடுகதைக்கு விடை காண்க.
 பேசமுடியாத ஓட்டப்பந்தய வீரனுக்கு வாய்க்கு மட்டும் பூட்டு. அவன் யார்? (கப்பல்/குதிரை)
36. முறை மாறியுள்ள சொற்களைப் பொருத்திச் சொற்றொடரை நிறைவு செய்க.
 முளையிலே விளையும் தெரியும் பயிர்
37. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுக.
 நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள். (ஒரு)
38. இருபொருள் தரக்கூடிய சொல்லைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.
 மாலை



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com